உ

ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5.

விக்கிரம ஹு மாசி மீ 1உ
பிப்ரவரி-1941

இதழ் 11. No 11.

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமிமலை)

குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனஅ னுரையுதவு மயிலா எனத்தினமு முருகாதே

குயின்மொழிநன் மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலன வரதமன மேனவே நடப்பர்நகை
கொளுமவர்க ளுடைமைமன முடனே பறிப்பவர்க ளெனவோரும்

தமதுவச முறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையிலுறு துகில்சரிய நடுவீதி நிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா வுழப்பியர்கண் வலையாலே

சதிசெய்தவ ரவர் மகிழ அணிமி னுருக்கியர்கள்
வசமொழுகி யவரடிமை யெனமாத ரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியே வழுத்தஅருள் தருவாயே

சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்தபொழு
தொருகோடியி லவர்கள்படை கெடவே லெடுத்தவனி
தனில்நிருதர் சிரமுருள ரணதூள் படுத்திவிடு செருமீதே

தவனமோடு மலகைநட மிடவீர பத்திரர்க
ளசிரநிண மோடுகுருதி குடிகாளி கோக்கரிசெய்
தசையுணவு தனின்மகிழ விடுபோய் நிரைதிரள்கள்
பலகோடி

திமிதமிட நரிகொடிகள் கழுகா டரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியா யுதத்தைவிடு
திமிரதின கரஅமரர் பதிவாழ்வு பெற்றுலவு முருகோனே

திருமருவு புயனயனொ டயிரா வதக்குரிசி
லடிபரவு பழநிமலை கதிர்காம முற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவேரகத்திலுறை பெருமாளே.

பதவுரை:

சமரமோடும் - போர்புரியும் ஊக்கமுடன், அசுரர் படை - இராக்கதருடைய சேனைகள், களமீது - போர்க்களத்தில், எதிர்த்த பொழுது - தேவரீரை எதிர்த்த காலத்தில், ஒரு நொடியில் - ஒரு நொடிப் பொழுதுக்குள், அவர்கள் படை - அந்த அசுரசேனைகள், கெட - அழிந்து போகுமாறு, வேல் எடுத்து - வேலாயுதத்தைத் திருக்கரத்தில் எடுத்து, நிருதர் சிரம் - அசுரர்களுடைய தலைகள் அற்று, அவனிதனில் உருள - பூமியின்கண் விழுந்து உருளுமாறு, ரணம் தூள்பிடித்தி விடு - அப்பகைவரைப் பொடிசெய்த, செரு மீதே - போர்க்களத்தில், அலகை - பேய்கள், தவனம் ஓடு நடனம் இட - (புலால் உணவில்) ஆசையுடன் கூத்தாடவும், வீரபத்திரர்கள் அதிர - வீரபத்திரர்கள் ஆரவாரஞ் செய்யவும், நிணம் ஓடு குருதி குடி - நிணங்களையுண்டு உதிரத்தைக் குடிக்கின்ற, காளி - காளிதேவியானவள், தசை உணவுதனில் மகிழ விடு - இறந்து பட்ட அசுரருடம்பின் தசைகளாகிய உணவையுண்டு மகிழுமாறு ஏவப்பட்ட, கோக்கரி செய் - கெற்சிக்கின்ற, பேய் நிரைத்திரள்கள் - பேய்களின் வரிசையாகவுள்ள கூட்டங்கள், பல கோடி - அநேக கோடிகள், திமிதம் இட - பேரொலி யுண்டாகும்படி மகிழ்ச்சியினால் கூத்தாடவும், நரி - நரிகளும், கொடிகள் - காக்கைகளும், கழுகு - கழுகுகளும், ஆட - நிர்த்தனஞ் செய்யவும், ரத்த வெறி - உதிரத்தைக் குடித்ததனால் வெறிகொண்ட, வயிரவர்கள் சுழல - வயிரவர்கள் சுழன்று ஆடவும், ஒரு தனி ஆயுதத்தை விடும் - இணையற்ற சிறந்த படைக்கலத்தை விடுத்தருளிய, திமிர தினகர - அஞ்ஞான இருளை நீக்கும் மெய்ஞ்ஞான பானுவே! அமரர் பதி வாழ்வு பெற்று - மாலயனாதி தேவர்களுக்கெல்லாம் தலைமையாகிய தன்மையை மேற்கொண்டு, உலவு - உயிர்கள்

தோறும் நின்று உலவுகின்ற, முருகோனே - முருகக் கடவுளே! திரு மருவு புயன் - இலக்குமி தேவியைத் தழுவுகின்ற தோள்களையுடைய திருமாலும், அயனொடு - பிரமதேவனும், அயிராவதக் குரிசில் - ஐராவதமென்ற வெள்ளையானைமேல் ஊர்கின்ற தேவர்கோமானும், அடி பரவு—தேவரீருடைய திருவடியைத் துதித்து நிற்கின்ற, பழநிமலை - பழநியம்பதியிலும் கதிர்காமம் உற்று - கதிர்காமம் என்னும் திருத்தலத்திலும் பொருந்தி யிருந்து, வளர் - வளர்கின்ற, சிவசமய - சைவ சமய நாயகரே! அறுமுகவ - ஆறு திருமுகங்களை யுடையவரே! திரு ஏரகத்தில் உறை - திருவேரகம் என்ற திருப்பதியில் அடியார் பொருட்டு வாழ்கின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! குமர - குமாரக் கடவுளே! குருபர - சிறந்த குருநாதரே! முருக - முருகவேளே! குகனே - குகமூர்த்தியே! குறச்சிறுமி கணவ - குறவர் குடியிற் பிறந்த இளமைப் பருவமுடைய வள்ளியம்மையாரது மணாளரே! சரவண - சரவண தடாகத்தில் தோன்றியவரே! நிருதர் கலகா - அசுரர் கலகா - இராக்கதர்களுக்குக் குழப்பத்தைச் செய்தவரே!, பிறை சடையர் - இளந்திங்களை முடித்த சிவபெருமானுக்கு, குரு என - குரு மூர்த்தி யென்று உலகம் புகழுமாறு, நல்உரை உதவும் - "ஓம்" என்ற ஒரு மொழிக்குப் பொருள் கூறிய, அயிலா - ஞானமாகிய வேலை யுடையவரே! என தினமும் - என்று துதித்து நாள் தோறும், உருகாது - மனம் உருகாமல், நல்குயில் மொழி மடவியர்கள் - நல்ல குயிலைப்போல் இனிமையாகப் பேசும் பெண்களும், விழியால் உருக்குபவர் - கண்களினால் ஆடவரை உருகச் செய்பவரும், அனவரதம் தெருவில் அனம் எனவே நடப்பர் - நாள்தோறும் தெருவில் (நாணமின்றி) அன்னத்தைப்போல் நடப்பவர்களும், நகை கொளும் அவர்கள் - தங்களைக் கண்டு மகிழ்ந்து நகைக்கும் ஆடவர்களுடைய, உடைமை மனம் உடனே பறிப்பவர்கள் - செல்வம் மனம் என்ற இரண்டையும் அக்கணத்திலேயே கொள்ளை கொள்பவர்களும், அனைவோரும்-எல்லோரும், தமது வசம் உற - தங்கள் வசப்படுமாறு, வசிய முகமே மினுக்கியர்கள் - மனதைக் கவரச் செய்கின்ற முகத்தை மட்டும் அடிக்கடி கழுவி அழகு செய்பவர்களும், முலையில் உறு துகில் சரிய - தனங்களின் மேலுள்ள ஆடை சரிந்து விழ (அங்கம் சிறிது தெரியுமாறு), நடுவீதி நிற்பவர்கள் - நடுத்தெருவில் நாணமின்றி நிற்பவர்களும், தனம் இலியர் - செல்வமில்லாத வறியவர்கள், மனம் முறிய - "இவர்கட்குப் பணந்தருதற்கு இல்லையே" என்று மனம் ஒடிய, நழுவா உழப்பியர் - நழுவி அவர்கள் உள்ளத்தைக் கலக்குகின்றவரும், கண் வலையாலே - கண்ணாகிய வலையை வீசி, சதி செய்து—வஞ்சனையைச் செய்து, அவரவர் மகிழ—தங்களிடம் வரும் ஆடவர் அனைவரும் தம்மையே இவள் நேசிப்பதாக எண்ணி உள்ளம் மகிழுமாறு, அணைமீது உருக்கியர்கள் - பஞ்சணைச் சயனத்தின்மீது அவ்வாடவரை

அழலிடை மெழுகுபோல் காமத்தியால் உருகப் பண்ணுபவர்களுமாகிய விலை மகளிரிடத்தில், வசம் ஒழுகி - மேற்படிந்து ஒழுகி, அவர் அடிமையென— அப்போது மாதர்கட்கு அடிமையாகி, மாதர் இட்ட தொழில்தனில் உழலும்—அப்பெண்கள் ஏவிய ஏவல் தொழில்களைச் செய்து அங்கு மிங்குஞ் சுற்றித் திரிகின்ற, சடனை—அறிவில்லாத அடியேனை, உன் அடியே வழுத்த—தேவரீரது திருவடித் தாமரைகளையே துதித்து உய்யுமாறு, அருள்வாயே—ஆண்டருள் புரிவீர்.

பொழிப்புரை:

போரில் ஊக்கமுடன் அசுர சேனைகள் போர்க்களத்தில் எதிர்த்தபோது, ஒரு நொடிப்பொழுதுக்குள் அவ்வசுரசேனை யழியுமாறு வேற்படையைத் திருக்கரத்தில் எடுத்து, அசுரர் தலைகள்யாவும் அற்று பூமியில் உருளுமாறு பகைவரை பொடிபடுத்திய செருக்களத்தில், பேய்கள் புலையுணவின் விருப்பத்தால் கூத்தாடவும், வீரபத்திரர்கள் ஆரவாரிக்கவும், நிணங்களை யுண்டு உதிரத்தைக் குடிக்குங் காளியானவள், இறந்துபட்ட அசுரர்களது தசைகளை யுண்டு மகிழ்ச்சி யுறுமாறு ஏவப்பட்ட கெற்சிக்கின்ற பலகோடி பேய்களின் வரிசையாகவுள்ள கூட்டங்கள் பேரிரைச்சலும் ஆடலும், நரிகளும் காக்கைகளும் கழுகுகளும் கூத்தாடவும், உதிர வெறிகொண்ட வயிரவர்கள் சுழன்று ஆடவும், ஒப்பற்ற சர்வசங்காரப் படையை விடுத்தருளிய அஞ்ஞான இருளை யகற்றும் மெய்ஞ்ஞான மார்த்தாண்டரே! மாலயனாதி வானவர்கள் சேனைகளாக அவர்கட்குத் தலைமை பூண்டு உயிர்கள் தோறும் நின்று உலவி வருகின்ற முருகக் கடவுளே! திருமகளைத் தழுவுந் திருமாலும், பிரமதேவரும், ஐராவத வூர்தியாகிய இந்திரனும், தேவரீருடைய திருவடியைப் புகழ்ந்து துதித்து நிற்கின்ற பழநியம்பதியிலும், கதிர்காமத்திலும் மேவி வளர்கின்ற சிவசமயச் செல்வமே! ஆறுமுகத் தரசே! திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள பெருமிதமுடையவரே! குமாரக் கடவுளே! குருபரரே! முருகப் பெருமானே! குகமூர்த்தியே! வள்ளிமணவாளரே! சரவணபவரே! நிருதர் குலகால பிறைமுடிப் பெருமானாகிய சிவமூர்த்திக்குக் குருவென்று உலகம்

புகழ "ஓம்" என்னும் முதலக்கரத்திற்குப் பொருள் விரித்துரைத்த ஞானசக்திதரரே! என்று வாயாரத் துதித்து, நெஞ்சார நினைத்து உள்ளம் உருகாமற்படிக்கு, குயிலைப்போல் இனிமையாகப் பேசுகின்ற பெண்களும், கண்களால் ஆடவருடைய மனத்தை உருக்குபவரும், நாள்தோறும் தெருவில் நாணமின்றி அன்னத்தைப் போல் (பலர் கண்டு காமுறும் பொருட்டு) நடப்பவரும், தங்களைக் கண்டு மகிழ்ந்து நகைக்கும் ஆடவர்களுடைய செல்வத்தையும் மனத்தையும் உடனே பறிமுதல் செய்பவரும், எல்லோரும் தங்கள் வசப்படுமாறு மனதைக் கவர்கின்ற தங்கள் முகத்தை அடிக்கடி கழுவி மினுக்குபவரும், தனங்கள் சிறிது தெரியுமாறு அவைகளின் மேலுள்ள சேலை விலக நடுத்தெருவில் நிற்பவர்களும், பொருள் தருதற்கு இயலாத ஏழைகள் தங்களைக் கண்டு மயலுற்று "பொருளின்மையால் இவர்களைப் பொருந்துதற் கில்லையே" என்றும் மனம் ஓடியுமாறு நழுவி அவர்கள் மனதைக் கலக்குபவரும், கண்வலையை வீசி வஞ்சனையைச் செய்து, தங்களை நாடிவரும் அவ்வளவு பேரும் தன்னையே இவள் நேசிக்கின்றாள் என்று மகிழுமாறு பஞ்சணைப் படுக்கையின் மேல் அவர்களை அழலிடை மெழுகைப் போல் உருகச் செய்பவருமாகிய விலைமாதர்களின் வசமாகி, தீய ஒழுக்கத்தில் ஒழுகி, அம்மாதர்கட்கு அடிமையாகி, அவர்கள் ஏவுகின்ற ஏவலைச் செய்து கொண்டு இங்குமங்குமாகச் சுழன்று திரிகின்ற அறிவிலியாகிய அடியேனை, தேவரீருடைய திருவடியையே துதித்து உய்யுமாறு ஆண்டருள் புரிவீர்.

விரிவுரை:

குமர:—

"குமார" என்ற அருமை மந்திரத்தின் அரும்பொருளை திருப்புகழமிர்தம் மலர் 4, பக்கம் 47-ல் கண்டு தெளிக.

சரவணம்:—

சரம் - நாணல், வனம் - காடு. நாணற்காடு. வடமொழி விதிப்படி வன என்பது வண என்றாயிற்று. நாணற்காடுடன்

கூடிய பொய்கையில் தோன்றியதால் முருகவேளுக்கு "சரவண பவன்" என்ற திருநாமம் ஏற்பட்டது.

அயிலா:—

அயில் - கூர்மை. ஆகுபெயராக வேலை உணர்த்துகின்றது. "உரையுதவும் அயிலா" எனவுங் கொள்ளலாம். அது சிறப்புறுது. குமரன்; குருபரன்; முருகன்; குகன்; குறச்சிறுமி கணவன்; சரவணன்; சிருதர் கலகன்; பிறைச்சடையர் குருவென நல்லுரை யுதவும் அயிலன்; என்ற எட்டுத் திருநாமங்களும், இறைவ னுடைய எண்குணங்களை யுணர்த்துகின்றன. (1) குமரன்; என்றும் இளமையாக இருப்பவர். இது "தன்வயத்தனாதல்" (2) குருபரன்; அவருக்கொரு குருமூர்த்தியின்றி தானே யாவர்க்கும் குருபரனாக விளங்குபவர். இது "இயற்கை யுணர்வினனாதல்" (3) முருகன்; பிறவா இறவாப் பெற்றி யுடையவன். இது "தூயவுடம்பினனாதல்" (4) குகன்; ஆன்மாக்களுடைய இதயகமலத்தில் பரம கருணையினால் வீற் றிருப்பவன். இது "பேரருளுடைமை" (5.) குறச்சிறுமி கண வன்; உயிர்கட்கு இன்பத்தை விளைவிக்கும் பொருட்டு இறைவன் இன்பசத்தியுடன் ஒன்றியுளன். இது, "வரம்பி லின்பமுடைமை" (6) சரவணன்; தானேயொரு தனிமுத லாகத் திகழ்பவன். இது, "இயல்பாகவே பாசங்களினின் றும் நீங்குதல்" (7) சிருதர் கலகன்; அலகிலா அவுணரை யழித்தவன். இது, "முடிவிலாற்றலுடைமை" (8) பிறைச் சடையர் குருவென நல்லுரை யுதவும் அயிலன்; சிவகுரு வாகிய ஞானசத்திகரன். இது "முற்றுமுணர்தல்."

> "சர்வஜ்ஞதா த்ருப்தி ரநாதிபோத: ஸ்வதந்த்ரதா
> நித்யமலுப்த சக்தி: அநந்த சக்திஸ்ச
> நிராமயாத்மா விசுத்த தேஹஸ்ஸ சிவத்வமேதி"
>
> — சர்வஞானோத்தராகமம்

> "தன்வயத்தவன் தூயவுடம்பினன் தானியற்கை யுணர்வினனாகுதல்
> பன்னுமுற்ற வுணர்தலியல்பினன் பாசநீங்குதல் பேரருளாகுதல்
> மன்னு மீறில வாற்ற லுடைமையும் வரம்பி லின்பமு மாகிய
> வெண்குணம்"

"பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே"

—அநுபூதி

குமரன் என்றதனுல் இளம்பூரணனுகவும், குருபரன் என்றதனுல் குருமூர்த்தியாகவும், முருகன் என்றதனுல் தெய்வத் தன்மையனுகவும், குகன் என்றதனுல் சர்வாந்தரி யாமியாகவும், குறச்சிறுமி கணவன் என்றதனுல் போகமூர்த்தியாகவும், நிருதர் கலகன் என்றதனுல் வீரமூர்த்தியாகவும், குருவென நல்லுரை புதவும் அயிலன் என்றதனுல் ஞானமூர்த்தியாகவும், எந்தை கந்தவேள் விளங்குகின்ருர் என்று உணர்க.

தினமும் உருகாதே:—

மேற் கூறிய திருநாமங்களை நாவாரச் சொல்லித் துதித்து நாள்தோறும் உருகவேண்டும்.

"முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்"

—அநுபூதி.

இறைவனுடைய திருநாமங்களைச் சொல்லி உருகுவாருடைய இருவினை இருளை எம்பெருமான் அகற்றுகின்ருன்.

"உருகு மடியவர் இருவினை இருள்பொரும்
உதய தினகர இமகரன் வலம்வரும்
உலக முழுதொரு நொடியினில் வலம்வரு
பெருமாளே"

மலர்ப்ப தத்தினில் உருகவும் இனியருள் புரிவாயே.

—திருப்புகழ்

இறைவனை நினைந்து உருகுவதே உய்யு நெறியாம். இவ்வாறு உருகாமல், "மாதரிட்ட தொழில்தனில் உருகும் அசடனுபினேன்" என்று உளங்கனிகின்றனர் நம் அருணையடிகள்.

4-வது வரிமுதல் 10-வது வரிவரை பொதுமகளிர் இளைஞரை மயக்குதற்குப் புரியும் சாகசங்களை யுணர்த்துகின்றது.

13-வது வரிமுதல் 21-வது வரிவரை முருகவேள் அசுரவதஞ் செய்த அற்புதத்தை யுணர்த்துகின்றது.

உ

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(226-வது பக்கத் தொடர்ச்சி.)

(24) கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாணமுயன்றவனே.

பதவுரை:

கோடு—ஊதுகொம்பும், குழல்—புல்லாங்குழலும், சின்னம்—திருச்சின்னங்களும், குறிக்க—ஒலிக்க, குறிஞ்சி கிழவர்—குறிஞ்சி நிலத்திற்கு உரியவர்களாகிய வேடர்களின், சிறுமிதனை — திருப்புதல்வியாராகிய வள்ளியம்மையாரை, முன்னம் - முற்காலத்தில், குறிச்சியில் சென்று—குறிஞ்சி நிலத்து ஊரில் (சிற்றூர்) போய், கல்யாணம் முயன்றவனே—திருமணஞ் செய்து கொள்ள முயன்றவரே! கின்னம் குறித்து—அடியேனுடைய துன்பத்தைத் தேவரீர் திருவுளத்தே குறிக்கொண்டு, அடியேன் செவி—அத்துயரத்தை நீக்கும் பொருட்டு அடியேனுடைய காதில், கேட்க—கேட்குமாறு, நீ அன்று சொன்ன — தேவரீர் அந்நாளில் உபதேசித்தருளிய, குன்னம்—இரகசியம், குறிச்சி—மெய்ஞ்ஞான மலைமேலுள்ள அருணெறியிலே, வெளியாக்கி விட்டது — அடியேனைச் சுத்த பரவெளியாக ஆக்கி விட்டது.

கருத்துரை:

அசுரகுலாந்தக! முருகவேளே! திருவேரகத் தெய்வமே! பொதுமகளிர் வலைப்பட்டு அழியாமல், தேவரீரது திருநாமங்களைச் சொல்லித் துதித்து உருகும் வண்ணம் அருள்புரிவீர்.

விரிவுரை.

கின்னம் குறித்து:—

அருணகிரி சுவாமிகள் திருவருணையில் உள்ளம் உடைந்து "இனி உயிர் துறப்பேன்" என்று வல்லாளன் புதுக்கிய கோபுரத்தினின்றும் கீழே விழ, அத்துன்பத்தைக் கண்ட கருணைக் கடலாகிய கந்தப் பெருமான், அடியார் திருக்கோலத்தோடு வெளிப்பட்டு, சுவாமிகளைத் தாங்கி, மௌனோபதேசம் புரிந்த வரலாற்றை இப்பாடல் உணர்த்துகின்றது. கின்னம் - துன்பம்.

"கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே"
—அநுபூதி.

அடியேன்செவி நீயன்றுகேட்கச்சொன்ன குன்னம்:—

அருணகிரியாருக்கு ஆறுமுகப் பெருமான் உபதேசித்த தன்மையை பல இடங்களில் சுவாமிகள் விளக்கி யிருக்கின்றார்.

"எட்டிரண்டுமறி யாத என் செவியில்
எட்டிரண்டு மிதுவா மிலிங்கமென
எட்டிரண்டும் வெளியா மொழிந்தகுரு
முருகோனே"

"வள்ளிக் கோனன் றெனக்குபதே சித்ததொன்றுண்டு"

"அரிதாகிய மெய்ப்பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த்தியவா!"

குன்னம்:— இரகசியம். குருநாதன் காதில் இரகசியமாகக் கூறுவது.

குறிச்சி:—

குறிச்சி - குறிஞ்சிசில ஊர். இங்கே ஞானமலையைச் சார்ந்த திருவருணரை புணர்த்தியது (வெளிபாக்க விட்டது). ஆன்மாவை சுத்த வெளியில் கலக்க வைத்து விட்டது.

"யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலை நின்றது தற்பரமே"

—அநுபூதி.

"மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்து கொண்ட வெளியே"

—திரு அருட்பா.

வெளியாக்கி விட்டது என்பதற்கு வெளிப்படுத்தி விட்டது என்று பொருள் கூறுவாருமுளர்.

கோடுகுழல்.........கிழவர்:—

குறிஞ்சி நிலத்தில் வேடுவர்கள், ஊது கொம்பு, வேய்ங் குழல், சின்னம், உடுக்கை முதலிய வாத்தியங்களை ஒலிப்பர்.

கிழவர்--- உரியவர். குறிஞ்சி நிலத்திற்கு உரியவர்; வேடர்.

குறிச்சியிற் சென்றுகல்யாண முயன்றவனே:—

திருப்பரங் குன்றத்திலே, திருமாலும் திசைமுகனும் தேவர் தலைவனும் தர, தேவகுஞ்சரியை மணந்து, எங்கந்தப் பெருமான், கற்பொழுக்கத்தைக் காட்டி யருளினர்.

பின்னர், குறிஞ்சியிற்போய் வேடர் செழுந்தினை காத்திருந்த பிராட்டி விலோசன அம்புக்கு இலக்காகி அவரைக் களவிற் புணர்ந்து, களவொழுக்கத்தையுங் காட்டி யருளினர்.

கருத்துரை:

குறிஞ்சி நிலத்திற் சென்று குறவர் கொடியை மணந்த குமார மூர்த்தியே! தேவரீர் அடியேனுடைய துன்பத்தை நீக்கத் திருவுளங் கொண்டு, என் செவியில் உபதேசித்த இரகசியம், அடியேனை ஞான வெளியாக்கித் தன்மயமாக்கிக் கொண்டது.

உ

ஓம் குஹாய நம:

சிவா நந்த லஹரீ

(227-வது பக்கத் தொடர்ச்சி)

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(71) ஆரூடபக்திகுணகுஞ்சிதபாவசாப
யுக்தை: சிவஸ்மரணபாணகணைரமோகை:!
நிர்ஜித்ய கில்பிஷரிபூந்விஜயீ ஸுதீந்த்ர:
ஸாநந்தமாவஹதி ஸுஸ்திர ராஜலக்ஷ்மீம்!!

பதவுரை:

ஸுதீந்த்ர: — நல்ல அறிவுள்ளவர்களுக்குள் உயர்ந்தவன்,

அரூட பக்தி குணகுஞ்சித பாவசாப யுக்தை: — ஏறியிருக்கின்ற பக்தியாகின்ற நாணினுல் வளைக்கப்பட்டிருக்கின்ற எண்ணமாகிற வில்லில் தொடுக்கப்பட்டவைகளாயும்,

அமோகை: — மிகுதியாயு மிருக்கின்ற,

சிவஸ்மரணபாணகவண: — பரமேசுவரருடைய நிவைவாகின்ற அம்புக் கூட்டங்களினுல்,

கில்பிஷரிபூன் — பாவங்களாகின்ற பகைவர்களை

நிர்ஜித்ய — நன்ருக வென்று

விஜயீ — மிகுந்த ஜெயத்தை யுடையவனுகி

ஸாநந்தம் — மகிழ்ச்சியோடு கூடியிருக்கும்படி,

ஸுஸ்திர ராஜ லக்ஷ்மீம் — நிலைபெற்ற அரிய யனுதியர்க்கு அரசராகிய சிவபெருமானுடைய பத சம்பத்தை

ஆவஹதி — அடைகின்ருன்.

பொழிப்புரை:

சிறந்த பக்தி பென்ற நாணை, வணக்கமாகிய வில்லில் பூட்டி, சிவத்யானமாகின்ற கணைகளால், பாவமென்னும் பகைவரை வென்ற நல்லறிவுடையவன், பேரானந்தத்தை யடைந்து, பிரமாதி தேவர்கட்குத் தலைவராகிய சிவபெருமானுடைய பதவியாகிய நலத்தைப் பெறுவான்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(232-வது பக்கத் தொடர்ச்சி.)

திக்குப் பாலகர்களையும் சூரியன் தேரையும் திக்கஜங்களையும் வட்டாடியவனும், தாய்வயிற்றிலிருக்கும் போதே நெருப்பைக் கக்கியவனும், சந்திரனைச் சிறைசெய்தவனும், அரியும் அயனும் ஊரும் கருடனையும் அன்னத்தையும் விளையாடும்படி கொணர்ந்தவனும், சூரனுடையமகனும், இணையற்ற வீரனுமாகிய அக்கினிமுகாசுரன் பிதாவைப் பணிந்து, போருக்கு விடைபெற்று, போர்க்கோலங்கொண்டு, 40000-ம் அசுரசேனை வெள்ளம் புடைசூழச் செருக்களஞ் சேர்ந்தான். பூதரும் அவுணரும் பொருதார்கள்; இருதிறத்திலும் கணக்கற்ற சேனைகள் அழிந்தன. இலக்கம் வீரரும். முன் வந்து சரமழை பொழிந்து அவுணரை இரிய இரிய வாட்டினர். அது கண்ட அவுண சேனாபதிகளான சோமன், சோமகண்டன் முதலியோர் எதிர்த்து அமராடினர். அதனைக் கண்ட நவவீரருள் ஒருவராகிய "வீரபுரந்தரர்" ஊழித் தீயைப்போல் உருத்து வில்லை வளைத்து கணைதொடுத்து சோமகண்டன் தலையை யறுத்தார். அவுணசேனைகளையும் அழித்தார். அக்கினிமுகனுக்கு உயிர்த் துணைவனாக நின்ற மேகனையும் கொன்றார். அதனை யறிந்த அக்கினிமுகன் அவரை எதிர்த்து கணைமழை பொழிந்தான். அதனால் பூதசேனை அழிதலுற்றது. உதிர ஆறு பெருகிற்று. வீரபுரந்தரர் அக்கினி முகனைத் தடுத்து கணைபல விடுத்தார். அவை அக்கினி முகனிடம் போய் கூர்மழுங்கின. அக்கினிமுகன் வீரபுரந்தருடைய தேரையும் வில்லையும் அறுத்து நூறு பாணங்களால் மார்பைத் தொளைத்தான். அசுரர்கள் ஆர்த்தனர்.

அதனைக் கண்ட நவவீரருள் ஏனைய எழுவரும், அக்கினி முகனை வளைத்து பாணமழை பொழிந்து அவனுடைய தேரை

யும், வில்லையும் அழித்து, அவன் மார்பில் ஆயிரம் கணைகளை அழுத்தினர்கள். அக்கினிமுகன் வேறு தேரேறி, "இத்துடன் அழியுங்கள்" என்று சிவப்படைக்கலத்தை எடுத்து வழிபட்டு விட்டான். அதனை வீரர் எழுவரும் கண்டு, அக்கினிப்படையென்றெண்ணி, வருணப் படைக்கலங்களை விடுத்தார்கள். சிவப்படைக்கலம் அவற்றை விழுங்கி உலகம் அதிரச் சென்று எழுவருடைய உயிரைக் கவர்ந்து மீண்டது. அக்கினிமுகன் அகமகிழ்ந்தான். பூதரும் அமரரும் வெருவி இரிந்தனர். வீரவாகு தேவர் பூதர் அஞ்சுதலைக் கண்டு "அபயஸ்தந் தந்து, அக்கினிமுகனை வந்து எதிர்ந்தார். இருவரும் பலப்பல கணைகளை விடுத்து அமராடினர். முடிவில் வீரவாகுதேவர் நஞ்சு பாய்ச்சிய நூறு கூர்ங்கணைகளை விடுத்தார். அவைகள் அக்கினி முகனுடைய மார்பைத் துளைத்தன. அக்கினிமுகன் அலறித் தேர்மீது சாய்ந்தான். அவன் மார்பில் உதிரவெள்ளம் பெருகியது. பிறகு தெளிந்த அக்கினிமுகன், 'பகைவர்களுடைய போரில் தோல்வியுறும்போது துணைசெய்வதாக' இளமையில் தான் வழிபட வரந்தந்த தன்னகர்க் காளியை நினைந்தான்.

சூலத்தையும் வாளையும் ஏந்திய காளி, கூளிகளும் பேய்களும் சூழ சிங்கவாகனத்தின் மீது வந்து, அக்கினிமுகனை "அஞ்சற்க" என்று அருளி, பூதானைவரையும் அழிக்குமாறு முத்தலைச் சூலத்தை விடுத்தாள். அது பூதரை யழிக்குமென்றுணர்ந்த வீரவாகுதேவர் 14-கணைகளால் அதனைப் பொடி செய்தனர். காளி மிகவுஞ் சினந்து மற்றொரு சூலத்தை விட்டனள். அது ஆலகாலம் போற் கொதித்து வந்தது. வீரவாகு தேவர் ஆயிரம் கணைகளால் அதனை அறுத்தார். காளி அது கண்டு உள்ளம் கனன்று சிங்கத்தினின்று மிறங்கி வாளை எடுத்து வெட்ட வந்தாள். வீரவாகுதேவர், பெண்ணாகிய இவளைக் கொல்லப்படாதென்று எண்ணி, அவளுடைய எட்டுக் கரங்களையும் இடக்காத்தால் பிடித்து, வலக்கரத்தால் ஒரு அறை அறைந்தார். வாயும் மூக்கும் உதிரஞ் சொரிய காளி அவசமுற்றனள். வலிகுன்றி விழுந்த அவள் தெளிந்தெழுந்து

பயந்து வீரவாகுதேவரைப் பணிந்து, "என் குற்றத்தை மன்னித் தருள்க; உமக்கு வெற்றியே யுண்டாகும்" என்று வாழ்த்தி விட்டு நீங்கினாள்.

அது கண்ட அக்கினிமுகன் சினந்து வீரவாகுதேவரை "யானே கொல்வேன்" என்று வந்து, நூறு கணைகளால் அவர் தேரை யழித்தான். வீரவாகுதேவர் அவனுடைய வில்லை யழித்தார். அக்கினி முகன் வேறு வில்லையெடுத்து, பிரமப் படைக்கலத்தை விடுத்தான். வீரவாகுதேவர் வீரபுத்திரப் படைக்கலத்தை விட்டனர். அது பிரமாத்திரத்தை விழுங்கி அக்கினிமுகன் தலைகளை வெட்டி, அவனுயிரைக் குடித்து மீண்டது. அமரர் ஆர்த்தனர். வீரவாகுதேவர் பிறகு தன்னை வளைந்த அவுணசேனைகளை யெல்லாம் கொன்று வீழ்த்தினர்.

வீரவாகு தேவரைப் பூதரும் வீரரும் சூழ்ந்தார்கள். வீரபுரந்தரும் வந்து சேர்ந்தார். வீரவாகுதேவர் "மற்ற எழுவர் எங்குற்றார்?" என்றார். உக்கிரர் "நூறுயோசனைக் கப்பால் ஆலமர நிழலில் அக்கினிமுகனால் மாண்டு கிடக்கின்றார்கள்" என்னலும், வீரவாகுதேவர், திடுக்கிட்டு அங்கு போய், தம்பியர் எழுவரையும் எடுத்து, ஓவென்று புலம்பிக் கண்ணீரால் நனைத்து,

தம்பிமீர் தம்பிமீரென் றுரைத்திடுந் தழுவிக் கொள்ளீ
ரெம்பிமீ ரென்னு மையோ எங்ஙனஞ் சென்றீ ரென்னும்
வெம்பினே னென்னு மென்னை விட்டகன் றீரோ வென்னு
நம்பினே னும்மை யென்னு நானுமக்கயலோ வென்னும்.

"சூரனையும் இந்நகரையும் இன்றே அழிப்பேன்; பாவியேன் உயிர் இன்னும் நீங்கவில்லையே; என் தம்பியரை எந்தக் கணைகளால் கொன்றனனோ? என் வீரம் அழகிது? முருகவேளுக்கு இனியான் என்ன கூறுவேன்?" என்று பற்பலவாறு கூறி கண் கலுழ்ந்தார். பிறகு வீரவாகுதேவர் வடவைத் தீயைப்போல் வெகுண்டு, "என் தம்பியர் உயிரைக் கொண்டு சென்ற இயமனை இக்கணமே கொல்வேன். மார்க்கண்டர்க்காக பட்ட உதையை மறலி மறந்தனன் போலும்? திருநீறுங் கண்டிகையும் பூண்டாரிடம் அவன் செல்லப்படாது என்ற சிவாக்ஞையை மறந்தான்

உ

ஓம் குஹாய நம:

சீகாளத்தி

யாதவ மஹாராஜன் கதை

(சீகாளத்தி ஆலயங் கட்டப்பட்ட வரலாறு)

உயர்திரு ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, M. A.
சென்னை.

(248-வது பக்கத் தொடர்ச்சி)

அதற்குச் சங்கமப் பிரான் 'எல்லா ஊரும் எம் ஊரே. யாம் எங்கும் இருப்போம். தக்ஷிண கைலாசம் என வழங்கும் சீகாளத்தியைக் காண விரும்பி வந்தனம். ஆங்கு வீற்றுள்ள சிவபெருமானுக்கு ஓராலயம் இல்லையே என வருந்து

போதும்'' என்று, ஒரு கணையை எடுத்து அதில் நகத்தினால்,

> வேலுடைத்தனி நாயகற் கிளையவன் விடுத்தேன்;
> கால நாடுறு கூற்றுவன் என்பவன் காண்க;
> கோல வெஞ்சிலைத் தவனவர்தம் ஆருயிர் கொண்டாய்
> வாலிதோ? இது விடுக்குதி கடிதென வரைந்தான்.

இவ்வாறு எழுதிய கணையை வில்லிற் பூட்டி விடுத்தார். அது கூற்றுவனிடம் புக்கது. அது கண்ட இயமன் நடு நடுங்கி ஓடி, கைலாயமலையில் ஒருபுறம் போயிருந்த எழுவருயிரையுங் கொணர்ந்து அவருடலில் சேர்க்க, எழுவரும் உய்ந்தெழுந்தார்கள். வீரவாகுவும் பூதரும் உள்ளம் உவந்தனர். இயமன் வந்து வீரவாகுதேவரைத் தொழுது, "நின் தம்பியரை அடியேன் கவர்வேனோ? கைலைபோயிருந்த இவரை அழைத்து வந்தேன்; சினவற்க'' என்று வேண்டி அருள்பெற்றுச் சென்றார். தூதர் ஓடி நிகழ்ந்ததனை சூரனிடம் உரைத்தனர். சூரன் "மகனே! மகனே!'' என அழுதான் அவன் மனைவியாகிய பதுமகோமளை யும் மகனிறந்ததற்கு அழுதாள்.

(தொடரும்)

கின்றோம். உலகமெல்லாம் உடைய பிரான் இருப்பதற்கு ஒரு கோயில் எடுப்பவர் இல்லையே எனப் பெருங் கவலை கொண்டேம்' உன்னையல்லால் அத்திருப்பணியை ஏற்றுச் செய்யும் அன்பர் வேறு இல்லையாதலால் அக்குறையை நீக்க வேண்டும் என்று உன்னிடம் சொல்லவே நாம் ஈண்டு வந்துள்ளேம்' என்றனர்.

இதைக் கேட்ட கோமகன், இழந்த கூந்தலைத் திரும்பப் பெற்ற அம் மடந்தை போலப் பெருமகிழ்ச்சி யடைந்து 'ஐய! நீயனும் அடியேனையும் பொருட்படுத்தி இக்கட்டளை யிட்டது யான் செய்த தவப் பேறே. தங்களது அருட் சொல் வழி நிற்பதே அடியேன் நன்மை பெறும் வழி. அந்தப் புண்ணிய பூமியாகிய சிகாளத்தியின் சிறப்பெலாம், எம்பெருமானே! எளியேனுக்கு எடுத்துரைக்க வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டனன். அவ்வாறே சங்கமேசரும் சிகாளத்தியின் சிறப்பெலாம் எடுத்துக் கூறினர். சி (சிலந்தி), காளம் (பாம்பு), அத்தி (யானை) இம் மூன்றும் பூசித்து முத்தி பெற்றதும், அதனுல் தலத்துக்குச் சீ காளத்தி எனப் பெயர் வந்ததும், கண்ணப்பர், நக்கீரர் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றதுமாய சரித்திரங்களை எல்லாம் விளக்கமாகக் கூறினர். இச் சரித்திரங்களைக் கேட்ட யாதவ ராஜன் பேரானந்தம் அடைந்து, என்னமா தவஞ் செய்தனன் நான் என மகிழ்ந்து சங்கமப் பெருமானை வணங்கினன். சங்கமரும் 'அரச! நீ காளத்தியை அடைந்து இறைவனுக்கு ஆலயத்தில் பணியைச் செய்து முடிப்பாயாக எனக் கூறி மறைந்தனர். மன்னன் அதிசயத்துடன் மண்ணில் தாழ்ந்தெழுந்து சிகாளத்தி நாதரே இங்ஙனம் சங்கம வடிவந் தாங்கி வந்தனர் என்பதை உணர்ந்து பெருந்தவம் நிறைந்த அம் மடந்தையைக் கும்பிட்டு அவளுக்கு ஆடைகளும் அணிகளும் நிரம்பத் தந்து, "தாயே! நீ இனிப் பணிப்பெண் தொழிலைச் செய்ய வேண்டாம்" எனச் சொல்லிவிட்டுத் தனது படைகளுடன் சிகாளத்திக்குச் சென்று சங்கமர் சொல்லியவாறே அழகிய திருக் கோயிலைக் கட்டி முடித்துப் * பஞ்ச மூர்த்திகளுக்கும் தேர்கள் அமைப்பித்து, இந்திர நகரும் நாணும் வகையில் திருநகரத்தை அலங்கரித்து, நித்திய நைமித்திய பூஜைகளுக்கும் திருவிழாக்களுக்கும் ஏற்பாடுகள் செய்து பெரும்பேறு உற்றவனாய் உலகைப் பல்லாண்டு புரந்து சிவானந்த வாழ்வை அடைந்தான்.

---

* சிவபிரான், தேவி, விநாயகர், முருகர், சண்டேசுரர்.